கடவுள் துணை.

திருவேளாங்கன்னி

அர்ச். ஆரோக்கியமாதாவின் தரிசன

சிங்காரப் புகழ்ப்பா

இதில்

சரித்திரமும், புதுமைகளும்

அடங்கியிருக்கின்றன.

தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமி பிள்ளை அவர்கள்

இயற்றியது

இரண்டாம் பதிப்பு.

இஃது

தஞ்சை

"ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

1925.

Registered.

OFFICE OF THE REGISTRAR ... SEP 1925 ... MADRAS

Q6:417
N25
183324

கடவுள் துணை.

விஞ்சையோர் புகழும் தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமி பிள்ளை அவர்கள்

இயற்றிய

சிங்காரப் புகழ்ப்பா

இதில்

திருவேளாங்கண்ணி அர்ச். ஆரோக்கியமாதாவின்

சரித்திரமும், புதுமைகளும்

அடங்கியிருக்கின்றன.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
9-SEP 192

தஞ்சை

"ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1925. [அணா 6.

Registered.

முகவுரை.

எந்நாட்டிலும், விண்ணுடனைப் புகழ்பெற்றோங்கி விளங்கும் வேளாங்கண்ணியென்னும் திவ்விய க்ஷேத்திரமானது சென்னை இராஜதானி, தஞ்சை ஜில்லாவிலுள்ள நாகப்பட்டினத்திற்கு தெற்கே அறுவது மைலில் அமையப்பெற்றிருக்கிறது. அதுமேற்கே வேதாரணியங் கால்வாயையும், தெறகே வெள்ளையாற்றையும், கிழக்கே வங்காளக்குடாக்கடலையும், மாலையாகவும், அதனருகாமையிலுள்ள செழித்த நிலங்களையெல்லாம் ஆபரணமாகவும் தரித்திருக்கிறது.

இத்திவ்விய க்ஷேத்திரத்தின்கண் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். ஆரோக்கியமாதாவை தரிசிக்க வரும் யாத்திரிகர்களில் அநேகர் நாகப்பட்டினத்திலிருந்து கடற்கரைவழியாகவும், பலர் திருத்துறைப்பூண்டிக்குப்போகும் ரஸ்தாவின் மார்க்கமாகவும், சிலர் கப்பல் பிரயாணமாகவும் வருகிறார்கள். நாளதுவரையிலும் இப்புண்ணிய க்ஷேத்திரம் உற்சவகாலங்களில் ஜலசமுத்திரத்திற்கெதிரிலே ஜனசமுத்திரம்போல் விளங்கித்துலங்குகிறது.

ஆகையால் இந்த க்ஷேத்திரத்திலே அர்ச். ஆரோக்கிய மாதா முதல்முதல் யாருக்குப் பிரசன்னமானாள்? எங்கே பிரசன்னமானாள்? என்னென்ன புதுமைசெய்தாள்? என்ற அவளது திவ்வியசரித்திரவரலாற்றை நம் கத்தோலிக் கிறிஸ்துவர்களனைவரும் அறிந்து பஜிக்கவேண்டுவதவசியமென்றெண்ணி அர்ச். ஆரோக்கியமாதாவின் தரிசன சிங்காரப் புகழ்ப்பா என்னும் பாடற்புத்தகத்தை தற்கால நாகரீக வர்ணமெட்டுகளிலமைத்து வெண்டமிழ் நடையில் சுலபமாய் யாவரும் எளிதில் பாடுவதற்காகவே 1922-ம் ஆண்டில் இயற்றிவெளியிட்டிருந்தேன். அம்முதற்பதிப்புக்காப்பிகள் செலவழிந்து போய்விட்டமையால் அதன் இரண்டாம்பதிப்புக் காப்பிகளை அச்சிட்டு வெளியிடவேண்டுமென நம் கிறிஸ்துவ நண்பர்கள் பலரும் கேட்டுக்கொண்டதற் கிசைந்தவண்ணம் இவ்விரண்டாம் பதிப்பை முன்னிலும் அதிக விரிவாயும், தெளிவாயும் இயற்றி வெளியிட்டுள்ளேன். குற்றங்களை நீக்கி குணம் பாராட்டுவீர்களென மிகவும் நம்புகிறேன்.

இங்ஙனம்,

T. M. D.

அர்ச். ஆரோக்கியமாதாவின்

சரித்திரச்சுருக்கம்.

ஆதியிலே வேளாங்கன்னி என்னும் திவ்விய க்ஷேத்திரமானது பெரும்பாலும் பனை, ஆல், அரசு முதலிய பல விருக்ஷங்களாலும், தாழைகளாலும் அடர்ந்து நெருங்கிய ஓர் காடாயிருந்திருக்கிறதாகவே தெரிகிறது. அதினுள் பனையோலை வேலிகளும், அவற்றை யணித்து இடை இடையே நிற்கும் பல ஹிந்துக்கள் கூரை வீடுகளும் அக்காலத்தில் இருந்திருக்கிறதாகவும் தெரிகிறது.

தற்காலம் தேவாலயம் இருக்கும் இடத்திலிருந்து நேர் மேற்கே சற்று தூரத்திற்கப்பால், தாழம்புதர்கலடர்ந்த குளத்தின் கரையிலிருந்த பெரியதோர் ஆலவிருட்சத்தின் சமீபத்தில் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் சேங்கழனிப் பேட்டையிலுள்ள வேளார்கள் ஒன்றுகூடி மண்வெட்டிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பூமியிலிருந்து எழுந்தாற்போல அர்ச். கன்னிமாமரி அவர்களுக்கு தரிசனையாக வேண்டி ஒருமின்னல் பெண்ரூபம் எடுத்து ஆயிரம் நட்சத்திரங்கள் நடுவே பிரகாசிப்பதுபோல குழந்தையோடு காந்தி பொருந்திய திருமேனியுடன் சுடர் வீசிப் பிரசன்னமானாள்.

அவளது முகமண்டலம் மங்காவொளிபோலவும், நேத்திரக்கமலங்கள் இரண்டும் கிருபை நிறைந்து பூத்த தடாகம் போலவும், அவளது ஆடையோ இவ்வுலகத்துத் தறிகளில் நெய்யப்படாமல் சூரிய கிரணங்களையும், பரலோகத்துமுத்து மாணிக்கங்களையும், இரத்தின வைடூரியங்களையும், நாலாக்கி நெசவு செய்ததுபோலவும் ஜொலித்துச்செண்பக புஷ்பத்தை விட மிருதுத்துவமும் புண்ணியவான் புகழைவிட சுத்த வெண்மையுள்ளதாயுமிருந்தன.

இதுகண்ட வேளார்கள் மாதாவினது ஜோதிப் பிரகாசத்தைப் பார்க்கமுடியாது கண்களிருண்டு, நடுக்கமுற்று பயந்து, பூமியில்விழுந்து மயக்க முற்றவர்களாய்க் கிடக்க, சற்றுநேரத்திற்கெல்லாம் குளிர்காற்று வீசவே, நித்திரை தெளிந்தெழுந்தவர்கள் போல எழுந்திருந்தார்கள். உடனே அத்திவ்விய கன்னிகை தனதுகையில் மூவுலகாளும் ஒரு குழந்தையோடு மிகுந்த ரூப லாவண்ணியத்துடன் அவர்களுக்கு தரிசனமாகி மறைந்தாள்.

மறைந்த அம்மாது சிரோன்மணியைப் புதுமையான மாரியம்மனென்று புகழ்ந்து போற்றி, அவர்கள் தங்கள் குல ஆசாரப்படி தங்கள் தங்கள் பத்தினிகளுடன் ஸ்நானம் செய்து, மனசுத்தமாயும், வெகு பயபத்தியாயும் தங்களுக்கு தரிசனமான விடத்தில் மாவிளக்குப்போட்டு, தேங்காயுடைத்து, நெய்விளக்கேற்றி புஷ்பம், பழம் முதலானதும்வைத்து, தீப தூப நைவேத்தியத்துடன் கொண்டாடினார்கள். அதுவே சாட்சியாக இன்று வரையிலும் நடந்து வருகிறது. அது சமயம் ஓர் குஷ்டரோகி மாதாவைப் பிரார்த்தித்து வேண்ட, மாதாவின் மன்றாட்டினால் குஷ்டம் நீங்கி சுகமடைந்தான்.

இது இப்படியிருக்க அச்சிற்றூரிலுள்ள அண்ணாப் பிள்ளையின் குமாரரும், மிகுந்த செல்வந்தருமாகிய ஸ்ரீமான் சக்கரையாப் பிள்ளையினது பசுக்களின் தொழுவத்திலிருந்து தினந்தோறும் பால்கறந்து கொண்டுபோகும் கோவிந்தனென்னும் இடையன், தான் வழக்கம்போல் சற்று இளைப்பாறும் இடமாகிய முன் சொன்ன குளத்தின் கரையிலுள்ள ஆலமரத்தடிக்கு வந்தபோது, மாதா குழந்தையுடன் அவனுக்குத் தரிசனையாகி குளிர்ந்தவாக்கினால் சற்று உரத்த சத்தமாக கோவிந்தனை அழைத்து "குழந்தைக்கு குடத்திலிருக்கும் பாலில் கொஞ்சம் கொடுக்கக் கூடுமா" வென்று கேட்க கோவிந்தன் குடத்திலிருக்கும் பாலை மொண்டு வேண்டுமான வரைக்கும் அருந்துங்களென்று அன்புடன் பாற்குடத்தை இறக்கிவைக்க, மாதா தன் கரத்திலிருந்த குழந்தையை பூமி

யில் விடவே, அக்குழந்தை தன் திருக்கரத்தைப் பாற்குடத்தினுள் விட்டளாவின வுடனே, திருக்குழந்தையை மாதா தன் கையில் தூக்கிக்கொண்டு திடீரென மறைந்தாள்.

மறையவும், பாற்குடம் வெறுங்குடமானதைக் கண்டு ஆச்சர்யமுற்று, வெறுமையாகிய பாற்குடத்தை கோவிந்தன் தன் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, நடந்த சம்பவத்தை சக்கரையாப் பிள்ளையிடம் தெரிவிக்கலாமென்று, அவர் வீடு வந்து இறக்கி வைக்கவே, வெறுமையான குடத்திலிருந்து பால் நிரப்பித் ததும்புவதைக்கண்ட காட்சியின் வரலாற்றை சக்கரையாப் பிள்ளை கோவிந்தனிடம் கேட்டு வியப்புற்று, தனக்கும் அத்தரிசனம் கிடைக்க வேண்டுமென்று அபேட்சித்து மேற்சொன்ன இடம் சென்றூர்.

கோவிந்தனுக்குக் கிடைத்தகாட்சி தனக்குக் கிடைக்காததால், மிகுந்த விசனத்துடன் தன் வீட்டிற்கு வந்திருக்க, அன்றிரவு சக்கரையாப் பிள்ளை கனவில் கோவிந்தன் காட்டிய ஆலமரத்தடியிலே, அதிக பிரகாசத்தோடு பிள்ளையுந் தாயுமாக காணப்படவே, அதிகாலையிலெழுந்து தான் கண்ட கனவினுல் மேற்கூறிய ஆலமரத்தடியில் மாதா நிட்சயமாயிருப்பதாக நினைத்து, அவ்விடத்தை சுத்திசெய்து, கொட்டகை இயற்றி தீபதூபநைவேத்திய சாம்பிராணி முதலான தும்போட்டு ஆராதனை செய்து வந்தார்கள்.

இவ்விதம் நாளுக்குநாள் அவ்வூரிலும், அதைச்சார்ந்த சிற்றூர்களிலுமுள்ள ஜனங்களுக்கு நம்பிக்கையும், பக்தியுமேற்பட்டு அவரவர்கள் தங்கள், தங்கள் ஆசாரப்படி கொண்டாடினூர்கள்.

இப்படியிருக்க, ஓர் நாள் நாகப்பட்டினம் ஆரியநாட்டு வீதியில்வசிக்கும் ஸ்ரீமான் ஆண்டியப்ப சம்மாட்டி என்பவர், தன்கனவில் மாதாவைக்கண்டதாக பலருக்கும் தெரிவிக்கவே, அவ்வூர் ஜனங்கள் வேளாங்கன்னிக்கு யாத்திரையாகி பக்திவினயத்துடனே ஆலமரத்தடியின்கண் ஆராதித்துக் கொண்டுவந்தார்கள்.

அதுசமயம், நாகப்பட்டினத்திற்குப்போகும் பாட்டையிலுள்ள ஓர் அரசமரத்துநிழலில், வழிப்போக்கர்களுக்கு மோர் விற்பனைசெய்துகொண்டிருந்த எளிய முடவனாகிய ராமகிருஷ்ணனுக்கு மாதா தரிசனமாகி தன் குழந்தைக்குக் குடிக்க கொஞ்சம் மோர் கொடுவென்று கேட்க, பிறவிச் சப்பாணியாகிய ராமகிருஷ்ணன் குடுவையில் மோரை மொண்டு கொடுக்க, மாதா அவனைப் பார்த்து "நீ எழுந்திருப்பாயென்று ஆக்கியாபிக்க இடைப்பையன் தாயே காலில்லா சப்பாணியாகிய யான் எவ்விதம் எழுந்திருப்பேனென்ன அதற்கு "நீ ஆரோக்கியமடைவாயென்று" ஆசிர்வதிக்கவே முடவனாகிய இடைப்பையன் சுகமடைந்தான்.

சுகமடைந்த இடைப்பையன் ஆண்டியப்ப சம்மாட்டியாரிடம்சென்று தான்கண்ட தரிசனக்காட்சிகளைத்தெரிவிக்க, அவர் அதைக்கேட்டு ஆச்சரியமுற்று அந்தத்தரிசனம் தனக்கும் கிடைக்கவேண்டுமென்று வெகு ஆவலாய் ஷை அரசமரத்தடியில்வந்து பார்க்கவே, மாதாவைக்காணாமல் மனமுருகி நிற்கும்போது அசரீரிவாக்கியமாக "சக்கரையாப்பிள்ளையைப்பார்" என்ற சப்தத்தைக்கேட்டு உடனே சக்கரையாப்பிள்ளையிடம்சென்று, நடந்த காட்சிகளைப்பற்றி பேசவே, இருவரும் முன்காட்சிதந்த ஆலமரத்தடியில்வந்து ஓர் சிறிய கூரைக்கோவிலைக்கட்டிமுடித்து வழக்கம்போல் பூசை நைவேத்தியம் முதலானதும் செய்துகொண்டுவந்தார்கள். காட்சியின் பெருமை உலகத்தில் பரம்பவே,

போர்த்துகேசியரென்னும் ஜாதியார் தங்கள் வியாபாரத்நிமித்தம், இரக்ஷண்ய 1498-ம் வருஷம் வைகாசி மாதம் 18-ம் தேதிமுதல் இந்தியாவிற்குவர பிரயத்தனமாகி சீனதேசஞ்சென்று, வியாபாரம்கொண்டு கப்பலைத் தென்கடல்வழியாய் நடத்திவருங்காலையில், பெரும் புயற்காற்றினால் கப்பலுக்கு அபாயம் நேரிடுவதைக்கண்டு, கப்பற்றலைவன் கப்பலைத் தன்னிலைக்குக் கொண்டுவருவதற்குக் கூடுமானவரை

யில் பிரயத்தனம்செய்தும் முடியாததை அறிந்து "கடவுளே நாங்களும், எங்கள் கப்பலிலிருக்கும் வியாபாரப்பொருட்களுஞ் சேதப்படாமல் குறித்த இடம் சேர்வோமாகில், பொருட்களின் தொகையை காணுகின்ற அத்துறைமுகத்திலிருக்கும் தேவாலயத்திற்குக் காணிக்கையாக கொடுக்கிறோமென்று வேண்டிக்கொண்டான்.

உடனே அர்ச். ஆரோக்கியமாதாவின் புதுமையால் புயற்காற்று நீங்கி கப்பல் நாகப்பட்டினத்திற்கெதிரில் நிற்பதைக்கண்ட கப்பற்றலைவன் கரையை நோக்கவே, மாதா தனது காந்தி பொருந்திய திருமேனியுடன் பிரசன்னமாகி சுடர்வீசி மறையவே, மாலுமிமுதலானோர் கப்பலைக் கடலில் நங்கூரம் போட்டு சிறு படகுகளிலேறி, நாகப்பட்டினம் சென்று அக்குற்றவர்களால் வேளாங்கன்னி அர்ச். ஆரோக்கியமாதாவின் தரிசனக்காட்சிகளைக் கேள்விப்பட்டு, உடனே வேளாங்கன்னிக்கு வந்து தாங்கள் வேண்டிக்கொண்ட பிரகாரம், கப்பலிலுள்ள சாமான்களின் கிரயத் தொகையால் அங்குள்ள கூரைக்கோவிலைப்பிரித்து, செங்கற்கட்டடமாகக்கட்டி பீடமொன்றமைத்து, மணிலாவிலிருந்து சொரூபமொன்று மாதாவும், குழந்தையுமாகக் கொண்டுவந்து வைத்து, தேர் ஒன்று செய்து வெகு ஆடம் பரமாய் திருவிழா மகோற்சவத்தை நடத்தினார்கள்.

இவ்விதம் திருவிழா உற்சவாதி கிரியைகள் நடந்தேறி வருங்காலத்தில் தேரிலிருந்த சொரூபமானது திடீரென மறைந்து பீடத்திலிருந்ததைக் கண்டு அதுமுதல் இற்றைவரைக்கும் அந்த சொரூபத்தை எடுக்காமல், வேறு சொரூபத்தைத் தேரில் வைத்து உற்சவத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள்.

முற்றிற்று.

கடவுள் துணை.

விஞ்சையோர் புகழும் தஞ்சை

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமிபிள்ளை அவர்கள்

இயற்றிய

சிங்காரப் புகழ்ப்பா.

வெண்பா.

மாட்சிசே ராரோக்ய மாதாவின் மகத்துவநற்
காட்சிசேர் சரித்திரத்தைக் காசினியில்—ஆட்சிசேர்
வான்சிங்கா ரப்புகழ்ப்பா வாய்ப்பாட வல்லதிருக்
கோன்வளனே வரமொன்று கூர்.

அர்ச். காபிரீயேல் துதி.

ராமமுகி பிரணதபாலா என்ற வர்ணமெட்டு.

2. இராகம்—கல்யாணி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

கபிரீயேல்வா னவனேகாரும்
கருணைபுரிய வாரும் வாரும் (கபி)

அநுபல்லவி.

அபிராமீ சாக்கைத்தானே
அன்பாய் ரெட் சித்த கோனே
அருள்வீ ரருள்வீ ரருள்வீ ரருள்வீர் (கபி)

ஜலந்தாவீசன் செகத்தையழித்த
சரித்திரம் வளனுக்குரைத்த
தலைவா தலைவா தலைவா தலைவா (கபி)

தஞ்சை துரை சாமி கீதம்
சாற்றினே னருள்வீர் நீதம்
சரணம் சரணம் சரணம் சரணம் (கபி)

சேசு பெருமான் துதிகள்.

கெஜமுகவதன என்ற வர்ணமெட்டு.

3. இராகம்—நாட்டை—தாளம்—ரூபகம்.

பல்லவி.

திருமரி சுதனே—கிருபை
செய்குவீரற் புதனே (திரு)

அநுபல்லவி.

சருவஜீவ தற்பராநந்தனே
சங்கீத மெங்கு முழங்கிட
மங்கள மிங்கு துலங்கிட (திரு)

சரணங்கள்.

கருணை புரிந்தெனைக் காருமீசா
காருண்யனே தயை காட்டும் வாசா
தருணம்வந்தே வாந் தாரும் நேசா
சந்தத முந்துணை தந்திட
மைந்தனின் சிந்தையு கந்திட (திரு)

அம்புவியோர்க்கரு ளளிக்கும் பாலா
அடியர் குறையகற் றுமநுகூலா
நம்பினேனேனதுரை சாமிசொற் சீலா
நத்தினேன் முத்தமிழ் பற்றிட
வித்தையும் புத்தியும் பெற்றிட (திரு)

தாஜராஜ தாஜராஜ என்ற வர்ணமெட்டு.

4. இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

நாதனே நந் நீதனே நாயகா வாரும்—இதோ (நாத)

அநுபல்லவி.

நாடியு மைப்பாடித் தேடுமடியார் மிடிதனைத்திரும் (நாத)

சரணம்.

நம்பினே னும்பர்கு ழெம்பிரான் செம்மலே நற்றவ முற்றவனே
நானில மேபுகழ் தேனினு மினிய ஞானிக ளுத்தமனே
சந்தினேன் முத்தமிழ் வித்தையும் புத்தியும் சத்தி யளிப்பவனே
நரைமலர் விரைவிடுந் தரைதனி லேதுரை சாமிக்கு கந்தவனே
சாமிக்குகந்தவனே, சாமிககுகந்தவனே, சாமிக்குகந்தவனே (நாத)

யாரோ இந்தச் சோலையில் என்ற வர்ணமெட்டு.

5. இராகம்—மத்யமாவதி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

தேவா உந்தன் திருவடியே துணை (தேவா)
திருச் சித்தமது போல் நடக்கச்
சிதகஞ்சித்த மேசுநாத (தேவா)

அநுபல்லவி.

ஜீவாதி காரணனாகிய
சின்மயா னந்தமே ஞான
திருவருட் தருபவ னனை (தேவா)

சரணம்.

பூவுலகந்தனைப் போற்றிக்கொண்டாடி
பொல்லாத பாவம் புரிந்தேனே தேடி

மூவுலகமாளு மூர்த்தியுனைக்கூடி
முத்தியடைந்திட முன்னின்றேனே பாடி

முறைதவ ராமலே காவா
முத்தொழில் புரியுமெ கோவா
துரைசா மித்தொழும் பாவா
துய்யனே யருள நீ வாவா (தேவா)

அர்ச். தேவமாதா துதி.

சுந்தரகணநாதா என்ற வர்ணமெட்டு.

6. இராகம்—நாட்டை—தாளம்—ஆதி.

பல்லவி.

வந்தருள்புரிவாயே தேவ மாமரியே நல
வாமளிப் பாயே (வந்)

அநுபல்லவி.

சுந்தர சுவைக் கினருஞ் சேயே
தோத்தரித்தேன் கிரு பாகரி தாயே (வந்)

எந்த இடர்களும் வந்தணுகாமல் நீ
சந்ததம் மைந்தரை சம்ரக்ஷிப்பாயினி (வந்)

தற்ப ரனுந் தோன்ற
அற்பு தமா யீன்ற
கற்ப கம் நீயே

தஞ்சைநகர் துரை சாமிசொற்பாடி
சரணஞ்செய்தேதுதி சாற்றினேன்தேடி (வந்)

அர்ச். சூசையப்பர் துதி.

ஏசு-ராஜநேசபாலனே என்ற வர்ணமெட்டு.

(ஐஸா நாலே நாலே என்ற வர்ணமெட்டு)

7. இராகம்—தேசிகம்—தாளம்—ஆதி.

பல்லவி.

வரந்—தாரும் தாரும் மாதவமுனி வளனெனுந் தாதா
மாசிலா நாதா மாமரி மகிழும் பொற்பாதா (வர)

அநுபல்லவி.

பாருலகில் வேறுதவி யாருமில்லை கூறினேன்
பத்திமுத்தி சித்திபெற உத்தமனே கோரினேன் (வர)

நேசமுறும் வாசமலர் வீசிடுமுல் லாசனே
நித்தியமுந் துத்தியமாய் நத்தினேன்விஸ் வாசனே (வர)

இச்செகத்தோர் மெச்சும்படி தச்சுவேலை செய்தவா
இணையிலாத துணைமரியா ளணையுடனே உய்தவா (வர)

திரைகடல்சூழ் தரைதனில்வாழ் துரைசாமி மன்றாடினேன்
தேடியுனை நாடித்தினம் பாடியேகொண் டாடினேன் (வர)

நாயகன், நாயகியை வேளாங்கன்னிக்குச் செல்லலாமென்று அழைத்தல்.

சென்று கனிபறித்து என்ற வர்ணமெட்டு.

8. இராகம்—தேசிகம்—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

திரு—வேளாங் கன்னிதனை நாடி—மானே
விரைவினில் போகலாந் தேடி—நாம்

விந்தையா யேசுவைமன் ருடி
விதம்விதமாய்ப் பாடி
வேண்டுவோங் கொண் டாடி (திரு)

கண்ணே—ஆரோக்ய மாமரியை நாமே—அங்கு
அனுதினம் போய்துதிப் போமே—வெகு
ஆச்சர்ய மென்று அறி வோமே
அவள் புதுமை தாமே
அவனிபுக ழாமே (திரு)

பெண்ணே—மல்லிகை முல்லைஇரு வாட்சி—கொண்டு
மகிழ்ந்து துதிப்பவர்கள் மாட்சி—காண
மண்ணி லிதுவோர்பெருங் காட்சி
மனிதர் பலர் சாட்சி
மாமரி யின் குட்சி (திரு)

தேவே—அன்னம் குயில்மயில்க ளாடும்—மிக
அன்புடன் வண்டுகளும் பாடும்—அங்கு
ஆனந்தமாக விளை யாடும்
அகன்றுபவ மோடும்
அருள்மிகவே கூடும் (திரு)

மானே—தஞ்சை துரைசாமிநற் பதமே—என்றும்
சாற்றிடுவேன் கேள் நிதமே—தேவ
தாய்மரி பாதஞ்சந் ததமே
சரணஞ்செய்வோ மிதமே
தாளிணையுஞ் சதமே (திரு)

அர்ச். ஆரோக்கியமாதாவின் துதிகள்.

ஆயர்கள் பாடியில் என்ற வர்ணமெட்டு.

(ஆண் ராஜா போய் என்ற வர்ணமெட்டு.)

9. இராகம்—இந்துஸ்தான் தோடி—தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

1. சந்ததஞ் சிந்தையி லந்தனை சிந்திக்க

முந்தவ ரந்தருவாய்—பூவுலகில்
சுந்தரி யேவருவாய் (சங்)

2. பாவலர் காவலர் யாவரும் போற்றிடும்
தேவசி காமணியே—மன்னர்குல
தாவீது மாமணியே (சங்)

3. கேளுமெந் நாளுமிவ் வேளாங் கன்னிதனை
ஆளுமா ரோக்யத்தாயே—வந்துயென்னை
மீளுந் துன்பத்தில்நீயே (சங்)

4. சத்திய வேதத்தி னுத்தமி நித்தமும்
பத்திவ ரவிடுப்பாய்—பரனைவேண்டி
முக்தியு நீகொடுப்பாய் (சங்)

5. எப்போதுந் தப்பிதஞ் செப்பிடா தொப்பிடு
மற்புத மாமரியே—அருள்செய்வா
யிப்போத யாபரியே (சங்)

6. விஞ்சையோர் கொஞ்சிடுந் தஞ்சை துரைசாமி
செஞ்சொற்ப தம்பாடினேன்—மாமரியுன்
தஞ்சம தைநாடினேன். (சங்)

திருச் சேசுநாத சீமானே என்ற வர்ணமெட்டு.

(திருச்சேந்தூர் வளரும் என்ற வர்ணமெட்டு)

10. இராகம்—தேசிகம்—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

திரு— வேளாங் கன்னி மரியாயே—உமை
வேண்டினேன் வருவாயே அன்பாயே
விமலனின் திருத்தாயே
விரைவிலருள் வாயே (வே)
தாயே— மாளாக்கருணை வாரிதியே—மல

Q6:417 N25
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
18332
சென்னை-600 008

மாயை யிருட்கோர் மதியே நிதியே
மாநிலப் புண்ய வதியே
வரமருளித் ததியே (மா)

தாயே— தொண்டன் எனக்குத் துணையேது—எந்தன்
துன்பமகற்ற வாது தகாது
சொல்லினுக் கடங்காது
தூயமரி மாது (தொ)

மா— தஞ்சை துரைசாமி சொற்பாடி—புகழ்
சாற்றினேனுனை நாடிக் கொண்டாடி
தஞ்சமெனவே தேடி
தாளிணை மன்றாடி (தஞ்)

சூசைமுனி மாதவனே காராய் நேராய் என்ற வர்ணமெட்டு.

(சோமசேகரனருளும் பாலா என்ற வர்ணமெட்டு.)

11. இராகம்—தேசிக தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

மாமரியுதவிசெய்வாய் மின்னி மின்னி—பூவில்
க்ஷேம மளிப்பாயே வேளாங் கன்னி கன்னி—வளர் (மாம)

அநுபல்லவி.

நாமமதை யேதுதித்துப் பாடி பாடி—உமை
நாடியே வருவோர்பல கோடி கோடி—அம்மா
தாமதஞ் செய்யாமலுமை நாடி நாடி—இதோ
தஞ்சமென வோடிவந்தேன் தேடித் தேடி—தாயே (மா)

காசினிக்கு நீயே சந்திர காந்தி காந்தி—மோக்ஷ
வாசிகட்கோர் சௌந்தரியாச் சாந்தி சாந்தி—முந்த
சூசையோ டுலகவரி நீந்தி நீந்தி—தேவ
நேசபாலனைக் கரத்தி லேந்தி யேந்தி—வந்த (மா)

வேதமுறை யானறியாப் பாவி பாவி—பொல்லா
மாதர்கள் வலையில் சிக்கி மேவி மேவி—என்றும்
பாதகனு கத்திரிந்தேன் தாவி தாவி—நீயும்
சாதகஞ் செய்வாயெனவே கூவி கூவி—வந்தேன் (மா)

தஞ்சை நகர் தன்னில்வெகு நாளாய் நாளாய்—வாழும்
செஞ்சொல் துரைசாமிப்பதங் கேளாய் கேளாய்—தாயே
நெஞ்சமகிழப் பாடினேன் மீளா மீளா—மனச்
சஞ்சல மகற்றியென்னை ஆளாய் ஆளாய்—கன்னி (மா)

வேளார்களுக்கு அர்ச். ஆரோக்கியமாதா பிரசன்னமாகுதல்.

ஆதிப்பிதாவே என்ற வர்ணமெட்டு.
(ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ணமெட்டு.)

12. இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

பல்லவி.

ஆண்டவன் தாயே உன்னை
வேண்டினேன்சேயே சரணம் (ஆ)

அநுபல்லவி.

காண்டகுஞ்செல்வ வேளாங் கன்னிநகரில் வேளார்
மீண்டருள் பெற்றகதை மேதினியி லேயுரைப்பேன் (ஆ)

ஆலமரத்தருகில் மேலுங் குளத்தெதிரில்
வேலைசெய்யவே வேளார் வேணமண்ணைத்தான் பறித்தார் (ஆ)

மண்ணைப்பறித்த வேளார் கண்ணிற் பளபளன
மின்னி ஜொலித்திலங்கி மீன்முடி யோடேமறைந்த (ஆ)

எங்கும் நிறை பரனை தன்கைக் குழந்தையாக்கி
செங்கரந் தன்னிலேந்தி சிங்காரமாயங்கெழுந்த (ஆ)
ஊரிலுனைப் புதுமை மாரியம்மனு மென்றே
பேருமுனக்குச் சூட்டி பிரபலமாய்க் கொண்டாடின (ஆ)
பாங்காக மாவிளக்கு தேங்காய்ப் பழங்கள்வைத்து
தூங்காமல் பெண்களன்று தோத்திரஞ்செய்யவே நின்ற (ஆ)
விஞ்சையோர் புகழும் தஞ்சைநகரில் வாழும்
செஞ்சொல் துரைசாமிநின் சேவடிகளைப் பணிந்தேன் (ஆ)

வேளார்கள், அர்ச். ஆரோக்கிய மாதாவைத் துதித்தலும், அங்கோர் குஷ்டரோகி சுகமடைதலும்.

நொண்டிச்சிந்து

13. இராகம்—புன்னாகவராளி—தாளம்—சாப்பு.

கன்னியெனுந்தாய் மரியை—வேளாங்—கன்னிதனில் கண்ட வேளா ரொன்றுகூடியே—பன்னீரபிஷேகம்—செய்து—பட்சமுடன் மாமரியின்பாதம் வணங்கி—துத்தியமே புரிய—அங்கு—சொல்ல வொருகுஷ்டரோகி சுகமடைந்தான்—இதுபெரும் புதுமையெனக்—கண்டு—எல்லோரும் நெய்விளக்கு ஏற்றியேவைத்தார்—எங்கள் குலதெய்வமென்று—வாழ்த்தி—இரகரங் குவித்துமே சிரம் வணங்க—அன்னைதன் திருமகனைக்—கொண்டு—ஆசீர்வதித்துமுனங் காட்சிகொடுத்தாள்—தஞ்சைவாழ் துரைசாமி—செஞ்சொலால்—சாற்றிப் புகழ்ந்தனையைப் போற்றியே செய்தேன்—சத்தியும் நீதானே—என்னம்மணி—சத்தியும் நீதானே.

இடைக்கோவிந்தனிடம், மாதாதரிசனையாகி பால் கேட்குதலும், இடைக்கோவிந்தன் பால் கொடுத்தலும்.

(இன்னும் வரக்காணேனடி என்ற வர்ணமெட்டு.)

14. இராகம்—வசந்தா—தாளம்—ஆதி.

பல்லவி.

புதுமையை என்ன சொல்வேன்—ஐயே
புண்ணியமதை விளக்க எண்ணியே மரியுதித்த (புது)

அநுபல்லவி.

பதுமைபோலவே மாதா பாலனைக் கரத்தேந்தி
பார்புகழ் வேளாநகர் பதிதனில் காட்சிதந்த
பரிபாலி புகழ் சுரர்வேலி—எங்கள்
பாக்கிய ஜெய சீலியின் (புது)

கோவிந்தன் பாற்குடங் கொண்டு வருகையிலே
குழந்தைக்குப் பால்கொஞ்சங் குடிக்கத்தாவென்று கேட்ட
குணநேசி மிக மகராசி—போற்றுங்
கோதிலா மறை வாசியின் (புது)

குடந்தனை யிறக்கியே குடியுங்க ளென்றிடையன்
குலதெய்வ மென்றுரைத்துக் கும்பிட்டெழுந்து நின்றான்
குருமணியே பெருந் தவமணியே—நல்ல
கோகுல நவ மணியின் (புது)

பாலன்தன் கரமதைப் பாற்குடத்தில் விடவே
மாயமாய் வெறுங்குட மாகியிருக்கக் கண்ட
வளன்தேவி வேளைத் தலமேவி—வந்த
வானரசி யா ளணியின் (புது)

தாயேயுன் மலரடி தஞ்சமென்றே துதிக்கும்
தஞ்சை துரைசாமியின் தமிழுக்கருள் புரிவாய்
தயைவாரி கன உபகாரி—எழில்
தத்துவ சிங் காரிதனின் (புது)

இடைக்கோவிந்தன், சக்கரையாப்பிள்ளை முன் வெறுங் குடத்தை வைத்தலும், அதிலிருந்து பால்நிரம்புதலும்

(ஆசையுண்டாகத்தடையோ என்ற வர்ணமெட்டு.)

15. இராகம்—நாதநாமக்கிரியை—தாளம்—ஆதி.

ஓடிப்பதம்.

பல்லவி.

ஆனந்தங் கொண்டு குதித்தான்—கோவிந்தன் மேலும்
அன்னைமரியைத் துதித்தான் (ஆன)

அநுபல்லவி.

ஞானமே தருந்தேவ தாயெனச் சாற்றி
வானவ ருந்தா மல்லவென் றேற்றி (ஆன)

சரணங்கள்.

ஆவலா யிவனங்குதேவத ரிசனத்தி னாச்சர்யந் தனைக்கொண்டு
குட மெடுத்து
தீவிர மாகநாடி மேவிசக் கரையிடந் தெரிவிக்க லாமென்று
வந்து குடத்தை
பூமியி லிறக்கிடத் தாமத •மின்றிப்பால் பொங்கிவ ழியக்கண்டு
சக்கரைப் பிள்ளை
தேவியுடன்மகவைக் கூவிய ழைத்துப்பால்தெகுளத்தைபாரென் று
பிரமை கொண்டு

காசினியில் மரியைப் பூசிக்கத் தானே
கருத்துடன் கோவிந்த னேடுவங் தானே
ஆசையாய் சக்கரை யாப்பிள்ளை தானே
ஆலமரம்வங் தமர்ந்திருந் தானே (ஆன)

வஞ்சனை யென்பதுங் கொஞ்சமு மறியேன் வரந்தா வந்திடுவாய்
தாயே யெனது
நெஞ்சம் புண்ணாகியே சஞ்சல மாகுதே நீயருள் தந்திடுவாய்
இது தருணம்

கஞ்சம லாடி தஞ்சமென் றேதொழக் கருணையும் புரிந்திடுவாய்
உனைக் காணவே
கெஞ்சுகி றேன்பிர பஞ்சம திலேயென் கிரியையு மறிந்திடுவாய்
எனக் கதறி

சக்கரை யாப்பிள்ளை தாண்டவ மாட
தரிசனங் காணுதால் தானவன் வாட
தக்கணங் கோவிந்தன் தாழ்ந்துமன் றாட
தஞ்சை வாழ் துரை சாமிசொற் பாட (ஆன)

சக்கரையாப்பிள்ளைக்கு தரிசனங் கிடைக்காததால் மனங்கசிந்து மாதாவை மன்றாடுதல்.

(அரங்கமாநகர் வாசனே என்ற வர்ணமெட்டு.)

16. இராகம்—இந்துஸ்தான்காப்பி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

தாயே வேளாங் கன்னியே கண் பாராய்
தஞ்சமென் றுமைக் கெஞ்சுறேன் மனச்சஞ்சலந்தீராய்
தாயே நீயே தயவு செய்வாயே (தா)

இங்கு உம்மைக் காணவே வந்தே னம்மா
ஏதென் மீதினில் வாதுமக்கென்ன ஓதுவீர் சும்மா
ஏற்றி போற்றி இறைஞ்சினேன் சாற்றி (தா)

அடிமை யானுந் தொழுது கொண்டேன் தாயே
அன்னையே பிதேர் உன்னருள்பெற எண்ணினேன் சேயே
ஆயே நீயே அருள்புரிவாயே (தா)

பாற்குடம் பொங்கிடச் செய்த தாயே
பாலனுமையே ஞாலமீதினில் தேடச்செய் தாயே
பாவி மேவி பற்றினேன் தாவி (தா)

தஞ்சை மாநகர் வாழுந்துரை சாமி
தாசன் கவிக்கு நேசமாய்ச் செவிசாய்க்குகந் நேமி
தானே தேனே தயையருள் மானே (தா)

சக்கரையாப்பிள்ளை, தன்கனவில் தரிசனமான மாதாவை ஆலமரத்தடியில் வந்து நமஸ்கரித்தல்

பரமனையேபாடி என்ற வர்ணமெட்டு

(குமரனையேபாடி என்ற வர்ணமெட்டு)

17. இராகம்—அமீர்கல்யாணி—தாளம்—ஆதி

பல்லவி

மாமரியே உம்மை மன்றாடுவோமே (மாம)

அநுபல்லவி

வாமவடு சிரத்தி சோமபத வரத்தி
க்ஷேமமுள் கரத்தி ஜெயந்தரு மாரோக்ய (மாம)

தொகையறு

உத்தமனுஞ் சக்கரையாப் பிள்ளையுமைக் காணும
லுறங்கிடும் போது நீயே
சத்திமிகுங் குழந்தையொடு கனவினில் தோன்றியே
தரிசனந் தந்த தாயே

அநுபல்லவித்தொடர்

பாளை கமுகுநிறை சோலைகள்வீசும் நறை
வேளை நகர்தனிலே விளங்கிடு மாரோக்ய (மாம)

தொகையறு

அதிகாலையி லாலமரத் தடியிலோர் கொட்டகை
அமைத்துமே சக்கரை தானே
விதிமுறையா யதிவிரைவில் தீபதூ பத்துடன்
வேண்டி உமைப்பணிந் தானே

அநுபல்லவித்தொடர்

தஞ்சையில் வாழுந்துரை சாமி செந்தமிழுரை
சாற்றியடி பணிந்தேன் தாயே யாரோக்கிய (மாம)

ஆண்டியப்ப சம்மாட்டியாரின் கனவில், மாதா தரிசன மாகுதல்.

மரிபாலா மகிதல என்ற வர்ணமெட்டு.

(வடிவேலா விகிசித என்ற வர்ணமெட்டு.)

18. இராகம்—சிந்துபைரவி—தாளம்—ஆதி

பல்லவி

மரியாயே அனுதின மலரடி தனைத்தொழ நாடினேன்
மனதில்கொண் டாடினேன் மகிழ்வுடன் தேடினேன் (மரி)

அநுபல்லவி

தாயே நீஎன்குறை தவிர்த்திட வாராய்
தஞ்சமென வுனைக் கெஞ்சுறேன் பாராய்
சேயனெனக்கருள் செய்துமே காராய்
செகமதிலுனையே சேவித்தேன் நேராய் (மாமரி)

ஆரிய நாட்டு வீதியில் தாயே
ஆண்டியப்ப சம் மாட்டிக் கன்பாயே
காரிருள் தனிலவன் கனவினில் நீயே
களித்திடவே நல்ல காட்சி தந்தாயே (மாமரி

அனையே உன்காட்சியை அனைவர்க்குந் தெரிய
ஆண்டியப்பனங் கெடுத்துரை புரிய
வினையறப் பலரும் விரைவினி லரிய
வேளைநகர் வந்து வேண்டினர் நிறைய (மாமரி)

அன்புடன் ராம கிருஷ்ண னு மோடி
ஆண்டியப்ப சம் மாட்டியைத் தேடி
இன்புடன் தரிசன மியம்பவே நாடி
ஏக்கமுற்று னுமைக் காணுமல் வாடி (மாமரி)

பாரோர் புகழ்குண பாக்கிய வதியே
பட்சம்வைத் தாண்டிடு வாயிது தியே
ஆரோக்யமே யுனை அண்டினோர் க்கதியே
அடைகுவாரே துரை சாமிசொல் நிதியே (மாமரி)

மாதா, பிறவிச்சப்பாணியிடம் மோர் கேட்குதலும், பிறவிச்சப்பாணி குணப்படுதலும்.

ஜப்தகலந்திரு என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

19. இராகம்—இந்துஸ்தான் கமாசு—தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

1. பார்புகழ் வேளைப் பதியிலிருந்து நாகைப்
பட்டினம் போகும் வழிதனிலே
ஓர் அரசமர நிழலிலோர் முடவன்
உதயமதில் மோர் விற்கையிலே (பார்)

2. முடவனும் ராம கிருஷ்ணனை மாதா
மோர்கொடு வென்று தான்கேட்க
குடத்திலிருந்து மோரைக் குடுவையில் மொண்டு
கொடுத்தா னவள்கிருக் கரந்தூக்க (பார்)

3. காரிகை யுறுமரி கன்னியம் முடவன்
காணவே தரிசன மாய்நின்று
நேரில் கண்டவனை எழுந்திருப் பாயென
நேசமுட னுரைத் தாளன்று (பார்)

4. என்னருந் தாயே ஏழையான் முடவன்
எவ்விதமெழுந் திருப் பேனென்றான்
உன்னிரு கால்கள் ஓங்கி வளருமென
உரைத்தவுட னெழுந் தேகின்றான் (பார்)

5. ஒப்பிலா மரியி னிப்பெரும் புதுமை
உலகமதி லெங் குமிலங்க
தப்பிலாமல் துரை சாமி செந்தமிழால்
சாற்றி துதித்தேன் சபை துலங்க (பார்)

சீனா தேசக் கப்பல் புயலிலகப்படுதலும், மாலுமி வேண்டுதலும்.

தெள்ளுதமிழுக்குதவும் சீலன் என்ற வர்ணமெட்டு.

20. இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

சீனதேசக் கப்பலொன்று நேராய்—வெகு
சிங்காரமாய் வந்ததுவே ஜோராய்—சையாம்
சிங்கப்பூர் பினாங்குதொட்டு வங்காளக் குடாக்கடலில்
போக துய ராக (சீன)

மின்னலிடி காற்றுமழை யாலே—கப்பல்
சொன்னதிசை மாறியலை யாலே—மிக்கத்
தொல்லையுட னல்லல்பட்டுச் செல்லும்வழி காணுவகை
யாச்சே பய மாச்சே (சீன)

கப்பற்றலை வனுமங்கே கண்டு—மிகச்
செப்பொணுத் துயரமது கொண்டு—ஜனம்
தப்பியேயுயிர் பிழைக்கக் கப்பலிலே தெய்வமதைத்
தானே வேண்டி னுனே (சீன)

இந்தக்கப்பல் துறைமுகம் நாடி—சென்றால்
அந்தத்திசை தெய்வமதைத் தேடி—யான்
சந்தோஷமாய்த் தந்திடுவேன் முந்தபொருள் யாவுமதை
என்றான் நிஜ மென்றான் (சீன)

காற்று மழை மின்னலிடி நீங்க—வெள்ளாங்
கன்னிக்கெதிர் கப்பலும் வந்தோங்க—அதைக்
கண்டுதுரை சாமிதமிழ் கொண்டினிமை யாயுலகில்
தானே பாடி னேனே (சீன)

அர்ச். ஆரோக்கியமாதாவின் புதுமையால் நாகப்பட்டினத்திற்கு நேராய் கப்பல் அற்புதமாக நிற்குதல்.

மானே எந்தனை என்ற வர்ணமெட்டு.

21. இராகம்—இந்துஸ்தான் பியாக்.—அடதாளம்.

கண்ணிகள்.

1. அற்புதமிது அற்புதம் அன்னை மரியின் பொற்பதம்
அரிய மனமரிய இது தெரிய பெரிய நறபதம்
அன்னைமரியின் உற்பவம் (அற்)

2. கப்பலும் திருவேளாங் காணிசேர்ந்த காட்சியே
காட்சிக் கண்காட்சி பெருமாட்சி யுலகில் சாட்சியே
காணிசேர்ந்த காட்சியே (அற்)

3. மாலுமி முதலானோர் மகிழ்வாய்க்கண்டு வணங்கிட
வந்துக்கரை வந்துப் பொருள் தந்துமனதிணங்கிட
மகிழ்வாய்க் கண்டு வணங்கிட (அற்)

4. சிறப்பாய்க் கப்பலேறியே சீனதேசம்நோக்கினர்
நோக்கிப்புகை போக்கிப்பயம் நீக்கிக்கடலைபோக்கினர்
சீனதேசம் நோக்கினர் (அற்)

5. சாற்றுந் தமிழிற்காமியே தஞ்சை துரைசாமியே
சாமித்துரை சாமிப்பெரும் பூமிபுகழு நேமியே
தஞ்சைதுரை சாமியே (அற்)

அர்ச். ஆரோக்கியமாதாவை மன்றாடுதல்.

அள்ளி அள்ளி நீர்க்குடிக்கும் என்ற வர்ணமெட்டு.

22 இராகம்—இந்துஸ்தான் பியாகு—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

1. மன்னர்குலத்துதித்த கன்னிசிங் காரியே
மங்கா வலங்காரி நீயே அருள் வாரியே (மன்)

இன்னகர் வேளாங் கன்னியில் மின்னு
மென்னருந் தாயே பொன்னகர்போற்று (மன்)

2. சென்னி தனில் தரித்த மீன்முடி சாட்சியே
செப்பிடவு மாட்சியே கண்காட்சியே (செப்)
ரெத்தினக் கமலஞ் சுத்திலும் பூட்டி
முத்துக்கள் தொங்கி மெத்த விளங்கும் (மன்)

3. உன்னையல்லாதுயெனக் கன்னை வேறேதம்மா
உன்னடிமை யானம்மா ஓமரியம்மா (உன்)
உத்தம சூசை பத்தினித்தாயே
சத்திய சுவைக்கின் புத்திரியான (மன்)

4. லெட்சணப்பாடலென்று மெச்சுமிப்பூமியே
பட்சமாய்த் துரைசாமியே தமிழ்க் காமியே (பட்)
பாடியே புனை நாடியே பிள்ளை
தேடியே யிங்கு வோடியே வந்தேன் (மன்)

அர்ச் ஆரோக்கியமாதா எழுந்தருளிவரும் சித்திரத்தேரின் சிறப்பு.

சித்திர மாளிகை என்ற வர்ணமெட்டு.

ஓரடிப்பதம்.

23. இராகம்—மோகனம்—தாளம்—ஆதி.

பல்லவி,

சித்திரத்தே ரது வெகு நேர்த்தி—ஆரோக்யதாயின்
தெரிசனங்காண் பது கன சீர்த்தி—அதி
திர சிங்கார கெம்பீர ஒய்யார (சித்)

அநுபல்லவி.

எத்திசைகளிலு மிதற்குவமானம்
இல்லையென்றிந்திர பதிக்குச்சமானம்
ரெத்தினப் பீட மமைத்துப்பிரதானம்
ரெடி ரெடி யென்றெவரு மதிக்கு நிதானம் (சித்)

சரணம்.

நாற்புறம் பளிங்கு ஸ்தம்பம் நாட்டி—வயிரத்தினால்
மேற்புரம் சிறுவை ஒன்று நீட்டி—உயர்ந்த தங்க
வாற்பிட மான சரங்கள் மாட்டி—மரிசிரசில்
பார்ப்பவர் பிரமிக்க முடி சூட்டி—முகப்பில் நவ

ரெத்தினங்களால் நவீன வேலை—அமைத்துப்பல
சித்திரப் புட்பச் செடிகள் போலே—சிறந்தவுறாணி
முத்தின மழுத்திப் பல காலே—ஜொலிக்க முன்பின்
வைத்தினி தமைத் துயர் முன்னாலே—ரதத்தின்மீது

நன்குவிளங்கிட பொன்கிலிட் டிங்கிதமாக—பூசியே பல
மின்குலம்வந்து இலங்கிய தன்மையதாக—கண்ணாடிகளால்
எங்குமேதங்கி யலங்கிர்தம் செய்தேகபோக—மாகநடுவில்
பங்கய மொன்றுயர் தங்கமதா லதி யூக—மதாய்ப்பதித்து

நாற்காலுக ளோடவடம் ஜோக்காக இரு புரமும் போட்டு விமானமதில்
டீக்கான மெழுகுவர்த்தி ஸ்டாக்காக எரிய போலீஸ்யிட்டு சுத்தியேவர
மாக்கான கொக்கிகளுடன் தூக்கியே குளோபர்வால்சேட்டு காந்தலைபிட்டு
பார்க்கப் பளீரெனவொளி தாக்கிடும் லஸ்தர்களுடன் வேட்டு அதிர்ந்திடவே

நாகரீக சின்ன லண்டின்கள் தாவ
ரத்ன சிஙகாசனம் நடுவினில் மேவ
வேகமாக துரை சாமிபண் தூவ
வெடிகளுடன் மத்தாப்புகள் நீவ (சித்)

இதுதானோ கோவைநகர் என்ற வர்ணமெட்டு.

24. இராகம்—சிந்துபைரவி—தாளம்—ஆதி.

பல்லவி.

போய் பார்ப்போம் வேளாங்கன்னி மா புண்ணிய க்ஷேத்திரம் ()

அநுபல்லவி.

சேயுடன் தோன்றி நின்று சிறுவரைக் காக்கவென்று
தெரிசன மாகிய மரியன்னை யிருப்பிடம் (போ)
பாதி மதி மிதித்து ஜோதியாகவுதித்த
பரமதாயெனுமரி திருமகளிருப்பிடம் (போ)
திடமாய் சப்பாணிநொண்டி முடங்குணமாக வேண்டி
தெருளுடனருள் தரு மரியன்னையிருப்பிடம் (போ)
தஞ்சையில் வாழுந்துரை சாமிதமிழினுரை
சந்தமேமற்றிடு மெந்தாயினிருப்பிடம் (போ)

திருவேளாங்கன்னி சிறப்பு.

(பரமானந்தமெய்ப்பரம் என்ற வர்ணமெட்டு.)

ஓடிப்பதம்

25. இராகம்—தேசிகதோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

திருவேளாங்கன்னி நகர் சீரை
செப்புவேன் நேரே (திரு)

அநுபல்லவி.

அருமை பெருமையுட னே வருவோரே
ஆரோக்ய மரியன்னை அருள் பெறுவாரே (திரு)

சரணங்கள்.

தில்லை அழிஞ்சில் ஈச்சை தென்னை—திந்திடிநறு
வள்ளி உசிலை வாகை கொன்னை—மாதுளைகொய்யா

கள்ளி கடம்பை இச்சி புன்னை—கற்பகக்தரு
வெள்ளில்கொழுக்காய்சித்தாமுன்னை—மிடத்தேர் நாவை
வேங்கையு மூங்கிலு மோங்கிவ ளர்ந்திடு மத்தி
அசோக கத்தி
வேலிலொடு வேப்பையு மாலையி லுட்பையுந் துத்தி
நெல்லியு மிந்தி
வெம்பாரை யாரஞ்சு ரம்பா வேர்பலா நத்தி
வரிசை பத்தி
மெச்சிலி மிச்சையுங் கிச்சிலி நார்த்தையுஞ் சுத்தி
எட்டிப ருத்தி
சந்தனத்தொடு குங்குமஞ்சிறு மந்தாரையுடன் செந்தாழைகரு
வாழை ரஸ்தாளி வாழை
சிந்தம்பாலைவெட் பாலையுங்கருங் காலிமுந்திரி கோங்குகள்நெடுந்
தேக்கு பேரிந்து பாக்கு
சந்ததம்புகழ் சிந்தையேமகிழ் பந்திபந்தியா யுள்ளசுந்தரச்
சோலை பலநாள் வேலை (திரு)

காக்கை யுடன் பருந்து நாரை—காணுங்கோழிகள்
தூக்க ணங்குருவிகள் கோரை—கொத்திகள் பல
நோக்கமாய்சுத்துதே நல்சாரை—தேரையைக்கண்டு
ஆக்க மாய்ப் பிடித்திடக்காரை—செடி யதனில்
மாடப்பு றுமெழுந் தோடிப்ப றந்திட வோடை
யருகில் காடை
ஜோடிய தாகவுட் கார்ந்திடும் போதன்னப் பேடை
காடடவே ஜாடை
பார்டிக்கு யில்மயி லாடப்ப ளிங்குறு மேடை
அதில்பட் டாடை
தேடிவி ரித்தழ கோடிருக் குமலர்க் கூடை
விகுதே வாடை (திரு)

64
17

மங்களம்.

ஸ்ரீ ராமச்சந்திரனே என்ற வர்ணமெட்டு.

26. இராகம்—அமீர்கல்யாணி—தாளம்—த்ருவம்.

கண்ணிகள்.

மன்னர் புகழும் வேளாங் கன்னி நகரில் பல
மாட்சி யளித் தவளே கார் கார் கார்
மங்களம் ஜெய மங்களம் (மன்)

மண்ணிலுமையே நித மெண்ணித் துதிப்பவர்க்கு
மங்கா வர மருள் வாய் நீ நீ நீ
மங்களம் ஜெய மங்களம் (மன்)

மறையோர் சாற்று மாமரி தஞ்ரயிலெல்லைம்பாதரி
மகிழ்வாயுமைத் துதித்தேன் பார் பார் பார்
மங்களம் ஜெய மங்களம் (மன்)

தஞ்சை துரைசாமி நின் தாளிணையைத்துதித்தேன்
சந்த தம்நீ யருள வா வா வா
மங்களம் ஜெய மங்களம் (மன்)

வாழ்த்து.

தாஜராஜ தாஜராஜ என்ற வர்ணமெட்டு.

27. இராகம்—இந்துஸ்தான் காம்போதி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

வாழ்க இங்கிலிஷ் ராஜரீகம் வாழ்க வாழ்கவே—இந்த
மானிலந்தன்னிலே தானிவர் நீடூழி காலம் வாழ்கவே
வல்லமையாகவே நல்லறம்புரியும் மானிடரெல்லோர்க்கும்
வரமதுபெறவே தவமுடனேரும் மறையோர் துறவர்க்கும்
மைந்தனும் எம். துரை சாமிதமிழ்ப் பதம் வாழ்த்தியே
[பாடினேனே
வாழ்த்தியே பாடினேனே வாழ்த்தியே பாடினேனே
[வாழ்த்தியே பாடினேனே

(முற்றுப் பெற்றது.)

சேசுமரி சூசையின் திருவடிகளே சரணம்.

விஞ்சையோர் புகழும் தஞ்சை

ஆனந்தகான பஜனை சபா ஸ்தவரும்

சித்திரக்கவி நாவலரும், பாகவதருமாகிய

T. M. துரைசாமிபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்ட

1.	பேரின்ப ஆனந்தகான கீர்த்தனங்கள்		ரூ. அ. பை.
		I பாகம்	0—6—0
2.	„ „ „	II பாகம்	0—6—0
3.	திருவருட் தோத்திரப்பா	... ...	0—6—0
4.	சிங்காரப் புகழ்ப்பா	... ...	0—6—0

இவை மதுரம் பழுத்துத் தேன்றுளிக்குஞ் சந்தச்சுவை, சொற்சுவை, பொருட்சுவைகளோடும், தற்கால நாகரீக அழகிய இந்துஸ்தான், பார்ஸி, காவடிச்சிந்து முதலான பல வர்ணமெட்டுகளோடுங்கூடி பக்திரஸத்தை யூட்டி, பரகதிக்கு வழிகாட்டும் இன்றியமையாத இனிய பாடற் புத்தகங்கள். இவைகளே.

☞ புத்தகம் வேண்டுபவர்கள் கீழ்க்கண்ட எமது விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தவக்கமன்னியில் வி. பி. மூலமாயனுப்பப்படும்.

T. M. துரைசாமி பிள்ளை,

சித்திரக்கவி நாவலர் & பாகவதர்,

கருந்தட்டாங்குடி போஸ்டு,

வலம்புரி, தஞ்சாவூர்

முக்கிய அறிவிப்பு.

நமது உத்தரவன்னியில் எவரும் இப்புத்தகத்தையாகிலும் அல்லது புத்தகத்திலுள்ள பாடல்களையாகிலும் அச்சிடக்கூடாது. அச்சிடுவார்களேயானால் நாம் கோரும் நஷ்டங்களுக்கெல்லாம் பாத்தியப்பட்வேண்டு மென்பதைத் திட்டமாய் அறிய வேண்டியது.

இப்படிக்கு,

T. M. துரைசாமி பிள்ளை.